TNTS0E0022722023



நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.S.இளையராஜா, M.L.,
நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை

**குற்றப்பல்வகை மனு எண்.11/2025**
**IN**
**சுருக்கு வழக்கு எண்.304/2023**

CNR.No.TNTS0E0022722023

ராமதாஸ் ... மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

தர்வீஸ் மைதீன் ...எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது என் முன்பு 25.02.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.நல்லையா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சிவசூர்யநாராயணன் அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில், இரு தரப்பு மனு, பதிலுரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் Re-open செய்து ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வேண்டி பிரிவு 330 BNSS-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர், எதிரி மீது நாணய மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ்

குற்றமுறையீடு தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பில் முதல்நிலை உறுதிக்கூற்று தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 09.10.2025 ம் தேதியில் மனுதாரரை குறுக்குவிசாரணை செய்து முடிக்கப்பட்டு, வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், மேற்படி முதல்நிலை உறுதிக்கூற்றை தாக்கல் செய்யும்போது, மனுதாரர் வருமானத்தை காட்டக்கூடிய தனிநபர் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் மனுதாரர் வங்கியிலிருந்து இன்ஷால் பேகத்திற்கு ரூ.10,00,000/- மனுதாரர் பென்ஷன் வங்கி கணக்கு மூலம் அனுப்பியதை காட்டக்கூடிய வங்கி கணக்கு புத்தகம் மற்றும் மனுதாரர் கைவசமுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் வீட்டின் ஆவணமான குற்றஞ்சாட்டப்பட்டவரும், அவரது மனைவியான இன்சால்பேகமும் கடந்த 2001 ம் ஆண்டு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதை காட்டக்கூடிய குத்தகை ஒப்பந்தம் ஆவணம் நகல் மற்றும் மனுதாரர் கைவசமுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர் வீட்டின் ஆவணமான குற்றஞ்சாட்டப்பட்டவரும், முருகராஜா பாண்டிய தலைவர் வகையறாக்கு கடந்த 2011 ம் ஆண்டு அவரது வீட்டை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதை காட்டக்கூடிய கிரைய ஒப்பந்த ஆவணம் ஆகிய ஆவணங்களை மனுதாரர் முன்னமே தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்குவிசாரணையின்போது மனுதாரரிடம் இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்று கேள்வி எழுப்பியதன் பொருட்டு மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்வது அவசியமாக உள்ளதாகவும், எனவே மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாக உள்ளது. பிரிவு 311 சிஆர்பிசி முதல் பகுதியின்படி வழக்கில் உள்ள எந்த ஒரு தரப்பினரும் சாட்சியை விசாரிப்பதற்காக மறுதிறப்பு (Reopen) செய்வதற்காக அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக பயன்படுத்த முடியாது. மேலும் பிரிவு 311 சிஆர்பிசி–ன் கீழ் முதலில் பகுதியாக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியை மீண்டும் அழைக்க எந்த ஒரு தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை. பிரிவு 311 சிஆர்பிசி–ன் முதல் பகுதி நீதிமன்றத்திற்கு மட்டுமே எந்த நபரையும் சாட்சியாக அழைக்க அதிகாரம் அளிக்கிறது. அந்த அதிகாரம் நீதிமன்றத்தால் நீதியுடனும் நியாயத்துடனும் பயன்படுத்தப்பட வேண்டும். நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரம் பரந்த அதிகாரமாக இருந்தாலும், அது வழக்கில் புகார்தாரருக்கோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கோ உதவுவதற்காக பயன்படுத்தப்படக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. புகார்தாரர் கோரியபடி பிரிவு 311 Cr.P.C.–ன் கீழ் இந்த அதிகாரத்தை பயன்படுத்துவது, வழக்கில் உள்ள குறைகளை (lacunae) நிரப்புவதற்காக மட்டுமே செய்யப்படும் முயற்சியாகும், ஏனெனில் புகார்தாரருக்கு ஏற்கனவே போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர், இந்நீதிமன்றம் **Cr.P.C. பிரிவு 311** இன் வரம்பையும் நோக்கத்தையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்றும், மேலும், இந்த மனுவை அனுமதித்தால், அது குற்றம் சாட்டப்பட்டவருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்நீதிமன்றம் Cr.P.C. பிரிவு 311 ஐ உருவாக்கிய நோக்கம், ஒரு துணை விதியாக, தேவையான மற்றும் முக்கியமான சாட்சியை நீதிமன்றம் அழைக்கக்கூடிய அதிகாரத்தை வழங்குவதாகும்; இல்லையெனில் அந்த சாட்சி நீதிமன்றத்தின் முன் வராமல் போகலாம். இந்த அதிகாரத்தை நீதிமன்றம் புகார்தாரருக்கோ அல்லது

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக பயன்படுத்த முடியாது. குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Rajaram Prasad Yadav vs State of Bihar (2013)** (2013 Cr.L.J Page 3777) என்ற வழக்கில், புகார்தாரர் வழக்கில் உள்ள குறைகளை நிரப்புவதற்காக பயன்படுத்தப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஏனெனில், புகார்தாரர் தனது சாட்சியங்களை 3 ஆண்டுகளுக்கு முன்பே முடித்துவிட்டார். அதன் பின்னர் அவர் எந்த மனுவையும் தாக்கல் செய்யவில்லை. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. <u>பிரச்சினை</u> :–**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–**

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**6. <u>தீர்வுகள்</u> :–**

(i) மேற்படி இருதரப்பிலும் எதிரெதிராக சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், இந்த வழக்கானது புகார்தாரரால், எதிரிக்கு எதிராக நாணயமாற்றாவன முறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, இருதரப்பும் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு வாதுரைக்காக 30.10.2025 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவானது மனுதாரர்/புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) அதற்கு இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணமானது, மனுதாரர் வருமானத்தை காட்டக்கூடிய தனிநபர் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் மனுதாரர் வங்கியிலிருந்து இன்ஷால் பேகம் என்பவருக்கு ரூ.10,00,000/- மனுதாரர்/புகார்தாரரின் பென்ஷன் வங்கி கணக்கு மூலம் அனுப்பியதை காட்டக்கூடிய வங்கி கணக்கு புத்தகம், மனுதாரர் கைவசமுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டினை பொறுத்து குற்றஞ்சாட்டப்பட்டவரும், அவரது மனைவியான இன்சால்பேகமும் கடந்த 2001ம் ஆண்டு குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதை காட்டக்கூடிய குத்தகை ஒப்பந்த ஆவணம் நகல், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வீட்டினை பொறுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர், முருகராஜா பாண்டிய தலைவர் வகையறாக்கு கடந்த 2011ம் ஆண்டு வீட்டினை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதை காட்டக்கூடிய கிரைய ஒப்பந்த ஆவணம் ஆகியவற்றை மனுதாரர்/புகார்தாரர் முன்னமே தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணையின்போது மனுதாரரிடம் இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்று கேள்வி எழுப்பியதன் பொருட்டு மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்வது அவசியமாக உள்ளது என்பதாகும்.

அதேவேளையில் மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை முன்னமே தாக்கல் செய்ய இயலவில்லை என சொல்லியிருப்பது ஏற்கத்தக்கதாக இல்லாததாக இருந்தாலும், எதிர்மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் எதிருரையில் பிரிவு 311 சிஆர்பிசி முதல் பகுதியின்படி வழக்கில் உள்ள எந்த ஒரு தரப்பினரும் சாட்சியை விசாரிப்பதற்காக மறுதிறப்பு (Reopen) செய்வதற்காக அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக பயன்படுத்த முடியாது. மேலும் பிரிவு

311 சிஆர்பிசி–ன் கீழ் முதலில் பகுதியாக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியை மீண்டும் அழைக்க எந்த ஒரு தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை. பிரிவு 311 சிஆர்பிசி–ன் முதல் பகுதி நீதிமன்றத்திற்கு மட்டுமே எந்த நபரையும் சாட்சியாக அழைக்க அதிகாரம் அளிக்கிறது. அந்த அதிகாரம் நீதிமன்றத்தால் நீதியுடனும் நியாயத்துடனும் பயன்படுத்தப்பட வேண்டும். நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரம் பரந்த அதிகாரமாக இருந்தாலும், அது வழக்கில் புகார்தாரருக்கோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கோ உதவுவதற்காக பயன்படுத்தப்படக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. புகார்தாரர் கோரியபடி பிரிவு 311 Cr.P.C.–ன் கீழ் இந்த அதிகாரத்தை பயன்படுத்துவது, வழக்கில் உள்ள குறைகளை (lacunae) நிரப்புவதற்காக மட்டுமே செய்யப்படும் முயற்சியாகும் என கூறி, அதற்கு ஆதரவாக மாண்புமிகு உச்சநீதிமன்றம் **Rajaram Prasad Yadav vs State of Bihar (2013)** (2013 Cr.L.J Page 3777) என்ற வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளதை பார்க்கையில், இந்த நீதிமன்றத்தில் மனுதாரர்/புகார்தாரரானவர் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மனுதாரர்/புகார்தாரரை Recall செய்யக் கோரி தாக்கல் செய்த மனுவானது எம்.பி.எண்.12/2025 இன் எஸ்.டி.சி.எண்.304/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்தது. அந்த மனுவில் எதிர்மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. அதனால் 21.01.2026 ம் தேதி மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்த Recall மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில் இந்த எம்.பி.எண்.11/2025 மனுவானது பிரிவு 330 BNSS–ன் கீழ் மனுவில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வழக்கினை Reopen செய்யக்கோரி மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார்.

அதனால் ஏற்கனவே Recall மனு அனுமதிக்கப்பட்ட பின்பு, இந்த Reopen மனுவை அனுமதிக்கக்கூடாது என எதிர்மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில், பிரிவு 311 சிஆர்பிசி முதல் பகுதியின்படி வழக்கில் உள்ள எந்த ஒரு தரப்பினரும் சாட்சியை விசாரிப்பதற்காக மறுதிறப்பு (Reopen) செய்வதற்காக அல்லது குறுக்கு விசாரணை செய்வதற்காக பயன்படுத்த முடியாது. மேலும் பிரிவு 311 சிஆர்பிசி–ன் கீழ் முதலில் பகுதியாக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியை மீண்டும் அழைக்க எந்த ஒரு தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை. பிரிவு 311 சிஆர்பிசி–ன் முதல் பகுதி நீதிமன்றத்திற்கு மட்டுமே எந்த நபரையும் சாட்சியாக அழைக்க அதிகாரம் அளிக்கிறது என்று கட்சி செய்திருப்பதை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

அதேபோல் இந்த மனுவை அனுமதித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டால், எதிர்மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அந்த ஆவணங்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்வதற்கு போதிய வாய்ப்புள்ளது.

மேலும் இந்த நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், மனுதாரர்/புகார்தாரர் தரப்பு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வழக்கினை மீண்டும் ரீஓப்பன் செய்வதால் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு எந்தவித கஷ்டநஷ்டமும் ஏற்படப்போவதில்லை. அதனால் நீதியின் நலன் கருதி இயற்கை நீதி கோட்பாட்டின்படி கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

TNTS0E0022722023



**<u>7. முடிவாக</u>**

மனுதாரர் / புகார்தாரர் ரூ.2,000/- ஐ தென்காசி சமரச மையத்தில் 27.03.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

அழைக்க 27.03.2026

**இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் வருடம் மார்ச் மாதம் 11 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.**

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.03.11 14:18:51 +0530

**நீதித்துறை நடுவர், செங்கோட்டை.**

**<u>இரு தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்கள்</u>** : இல்லை.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.03.11 14:18:55 +0530

**நீதித்துறை நடுவர், செங்கோட்டை.**